**தலைப்பு 277 – மொனராகலை மாவட்ட செயலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மொனராகலை மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2019 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மொனராகலை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 279/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு அந்நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொனராகலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் கூறப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### (அ) நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பிபில பிரதேச செயலகத்தினால் கணனி இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 313,500 தொகை 277-1-1-0-2102 ஆம் இலக்க அலுவலக உபகரண செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 277-1-1-0-2103 ஆம் இலக்க இயந்திரங்கள் மற்றும் பொறிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செலவின விடயங்கள் வகைப்படுத்தப்பட்டு தரப்படுத்தப்பட்டுள்ள வகையில் கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். இயந்திர தன்மையிலான உபகரண கொள்வனவு 277-1-1-0-2103 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் தளபாடங்கள் தன்மையிலான உபகரணங்கள் கொள்வனவு 277-1-1-0-2102 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீகொள்வனவு செய்வதற்கு மதிப்படு தயாரிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது |
| (ii) | மெதகம பிரதேச செயலகத்தினால் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 98,440 தொகை அலுவலக உபகரண கொள்வனவு 277-1-1-0-2102 ஆம் இலக்க விடயத்தின் கீழ் கணக்கீடு | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செலவின விடயங்கள் வகைப்படுத்தப்பட்டு தரப்படுத்தப்பட்டுள்ள வகையில் கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் குறைவடையும் வகையில் நடவடிக்கை எடுக்கின்றேன். |

செய்யப்படாமல் 277-1-2-0-1201 ஆம் இலக்க எழுது கருவிகள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.6.2. கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்களுக்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரத்து பேணிச்செல்ல வேண்டுமென கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டும். அவ்வாறே அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2011 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் திருத்திய 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 89 ஆம் பிரிவு. 1964 இன் 29 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் சபை சட்டத்தின் 16(1) மற்றும் 16(2) ஆம் பிரிவுகள் மற்றும் 2017 மார்ச் 16 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2010/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | 13,000,000 | புத்தள, படல்கும்புற மற்றும் மடுள்ள ஆகிய பிரதேச செயலகங்ளினால் பயிர்ச்செய்கை கிணறு நிர்மாணச் செயற்திட்டத்தின் கீழ் 33 பயிர்ச்செய்கை கிணறுகளை நிர்மாணிக்கும் போது அதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது பெற்றுக் கொள்ள வேண்டிய சட்ட அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். | அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள தேவையான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன . |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) 2018 மார்ச் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை மற்றும் 2015 யூலை 10 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | - | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாத ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலைமையில் காணப்படும் ஒரு உழவு இயந்திரமொன்றும், கலப்பையொன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு பல வருடங்கள் கடந்திருந்த போதும் மடுள்ள பிரதேச செயலகத்தினால் அவற்றை கைதவிர்க்கப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் மூலம் கைதவிர்ப்பு செய்வதற்காக அங்கீகாரம் கிடைத்துள்ளது. |

## 2. நிதி முகாமைத்துவம்

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத கட்டுநிதி மீதி ரூபா 5,494,393 ஆக இருந்தது | ஆண்டின் இறுதியில் கட்டுநிதிக் கணக்கின் மீதி திறைசேரிக்கு தீர்வு செய்யப்பட வேண்டும். | தேர்தல் ஆணைக்குழுவினால் இத்தொகை மீள்நிரப்பியதன் பின்னர் தீர்வுசெய் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினப் படிகள் கொடுப்பனவிற்காக ரூபா 9,000,000 ஆன நிதிஏற்பாடு பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் செலவினம் மேற்கொள்ளும் போது மேலும் ரூபா | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செலவினங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 3/2016 பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆரம்ப சம்பள அளவு அதிகரித்தமை மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு என்பன மூலம் கோரப்பட்ட நிதிஏற்பாடுகள் அதே அளவில் கிடைக்காமையால் திறைசேரி |

| | | | |
|---|---|---|---|
| | 2,000,000 தொகையான நிதிஏற்பாடு நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 இன் பிரகாரம் அதற்காக மாற்றப்பட்டு மீளாய்வாண்டில் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினப் படிகள் கொடுப்பனவிற்காக ரூபா 10,983,399 செலவிடப்பட்டிருந்தது. 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 02 (iii) ஆம் பந்தியின் மூலம் மேலதிக நேரப் படிகள் கொடுப்பனவின் போது தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கைளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் அந்த ஏற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாமல் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | | அங்கீகாரத்துடன் நிதிஏற்பாடு மாற்றப்பட்டதுடன், செலவினம் மேற்கொள்ளும் போது தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கைளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் பிரயாண பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் செலவினத்திற்காக ரூபா 8,2,000,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 இன் பிரகாரம் மேலும் ரூபா 3,000,000 தொகை இச்செலவின விடயத்திற்காக மாற்றப்பட்டு அதில் ரூபா 11,195,358 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 02 (i) ஆம் பந்தியின் மூலம் பிரயாணச் செலவின கொடுப்பனவின் போது சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் ஏற்பாடுகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செலவினம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய 20/2018 ஆம் இலக்க ரொது நிர்வாக சுற்றறக்கையின் பிரகாரம் இணைந்த படி அளவு அதிகரித்தமை மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்களின் பிரயாண செலவினப் படிகள் அதிகரித்தமை காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகள் போதியளவில் இல்லாமையால் திறைசேரியின் அங்கீகாரத்துடன் நிதிஏற்பாடு மாற்றப்பட்டதுடன் செலவினம் மேற்கொள்ளும் போது தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

## 2.3 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 8.36 மில்லியனான வைப்பு மீதிகள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 10,506,198 ஆன ஒப்பந்த நிறுத்திவைத்தல் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதி போதியளவில் இல்லாமையால் நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. எதிர்காலத்தில் கைத்தொழில்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கொடுப்பனவு செய்வதற்கு நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பிபில பிரதேச செயலகத்தில் கட்டிடத்தின் முதலாவது கட்டத்தை நிறைவேற்றுவதற்குரியதாக ரூபா 5,614,590 ஆன பெறுமதிசேர் வரி பொது வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இத்தொகையில் ரூபா 2,318,000 தொகை 2018 நவம்பர் 31 ஆந் திகதி நானாவித வைப்புக் கணக்கிற்கும் ரூபா 3,296,590 தொகை 2019 திசெம்பர் 31 ஆந் திகதி பிணை வைப்புக் கணக்கிற்குமாக இரண்டு வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட வரித் தொகையை பெற்றுக் கொள்வதற்காக ஓராண்டிற்கு மேற்பட்ட காலப்பகுதியில் ஒப்பந்தக்காரர் பெறுமதிசேர் வரி விடுவிப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாமல் | விடுவிப்புச் சான்றிதழ் சமர்ப்பித்த ஒப்பந்தக்காரர்களுக்காக பெறுமதி சேர் வரித் தொகை கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதுடன் பின்னரான கொடுப்பனவிற்கு வரித்தொகையை வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்க கூடாது. | ஏற்றுக்கொள்கின்றேன். ஏற்றுக் கொள்ளப்பட்ட விடுவிப்பு சான்றிதழ் சமர்ப்பிக்காமையால் வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. தொடர்ந்தும் செல்லுபடியான விடுவிப்புச் சான்றிதழை வழங்கா விட்டால் இம்மீதியை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்ததுடன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் பெறுமதிசேர் வரி பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | | |
| (இ) | புத்தள பிரதேச செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டிரநாத நான்கு செயற்திட்டங்களுக்குரிய சேமிக்கப்பட்ட நிர்வாக செலவினம் ரூபா 91,989 தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் அத்தொகையில் ரூபா 83,700 இற்கு மடிக்கணனியொன்று கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. | கணனி கொள்வனவு செய்வதற்காக 277 தலைப்பின் கீழ் திட்டவட்டமான செலவின விடயமொன்று உள்ளதுடன் அதற்காக ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாடுகளில் இருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்ட வேண்டும். அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக கிடைத்த நிர்வாகச் செலவினம் வேறு செயற்பாடுகளுக்கு பயன்படுத்தக்கூடாது. | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

### 2.4 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இடமாற்றம் பெற்றுச்சென்ற, மரணித்த, ஓய்வுபெற்ற மற்றம் சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் மீதி ரூபா 2,773,724 ஆக இருந்ததுடன், அக் கடன் மீதியில் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் கடன் மீதி ரூபா 2,283,069 ஆக இருந்தது. | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 உள்நாட்டு நிதியங்களிலிருந்து செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 08 பிரதேச செயலகங்களை செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைப் பகுதிகள் குறைவாக நிறைவேற்றப்பட்டிருந்தமை, உரித்தல்லாத விலை விகிதங்கள் பயன்படுத்தப்பட்டமை, வீதிகள் விலை விபரங்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை, பூர்த்தி செய்யப்பட்ட வேலை அளவுகளை மிகைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை மற்றும் அரசிற்கு சாதகமாக மதிப்பீடு தயாரிக்காமை போன்ற விடயங்களுக்குரிய ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 5,267,816 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2020 யூன் 11 இல் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த தொகையில் ரூபா 4,228,858 அறவிடப்பட்டிருந்தது. | மதிப்பீடு தயாரித்தல் மற்றும் கொடுப்பனவு அறிக்கையிடல் சரியான பொறுப்புடன் செய்யப்பட வேண்டியதுடன் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட எஞ்சிய தொகை அறவிடப்பட வேண்டும். | இச்செயற்திட்டத்திற்குரிய அறவீடுகள் தொடர்பான விபரங்கள் மற்றும் தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (ஆ) மொனறாகல பிரதேச செயலகத்தினால் கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 07 ஏக்கர் வீதி மற்றும் மாதுருகெட்டிய 07 ஏக்கர் வீதி ஆதபள்ளம வீதி என்பன கொங்கிறீட் இட்டு புனரமைப்பதற்காக ரூபா 1,932,747 தொகை செலவிடப்பட்டிருந்தது. 07 ஏக்கர் வீதி பூர்த்தி செய்யப்பட்டு ஓராண்டு காலத்தின் பின்னரும் மாதுரு கெட்டிய 07 ஏக்கர் ஆதாபள்ளம வீதி நிறைவு பெற்செய்யப்பட்டு 07 மாத காலத்தின் பின்னர் இவ்வீதிகள் இரண்டிலும் ஆங்காங்கே கற்கள் தோன்றி கழன்று போயிருந்தன. | நிர்ணயிக்கப்பட்ட தரத்தின் பிரகாரம் நிர்மாணம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் குறித்த செயற்பாடு நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்த வேண்டும். | வீதிகளின் பகுதிகள் சரிசெய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய பகுதியை சரிசெய்து தருமாறு ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) மொனறாகலை பிரதேச செயலகத்தினால் 2019 கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாராவ கிவுலே ஆர ஊடாக புபுலு வரை வீதியின் 900 மீற்றர் அளவிலான பகுதியொன்றை புனரமைப்பதற்காக | மதிப்பீட்டின் பிரகாரம் வேலைப் பகுதிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டபின் | உடன்படிக்கை தொகையில் 10 சதவீதமான ரூபா 97,100.44 தொகை ரூபா 82,116.69 தொகை என்பன அரச வருமானத்திற்கு செலவு |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 970,000 தொகைக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வீதி அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த 750 மீற்றருக்காக ரூபா 821,166 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிர்மாணிக்கப்பட்டிருந்த வீதியின் பகுதிகள் ஆங்காங்கே குழிகள் தோன்றியிருந்ததுடன் உடன்படிக்கை திகதியில் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும் அதற்குரிய தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உடன்படிக்கை பிரகாரம் வேலைப்பகுதிகள் நிறைவேற்றப்படாமை தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் | வைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வீதியில் குழிகள் உருவாகியிருந்த இடங்களில் சில பகுதிகள் சரி செய்யப்பட்டுள்ளன. |
| (ஈ) | படகும்புற பிரதேச செயலகத்தினால் கம்பெரலியா 2019 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொ/முதுகெலியா மத்திய வித்தியாலயத்தின் விளையாட்டரங்கு நிர்மாணச் செயற்திட்டத்திற்காக ரூபா 678,380 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இப்பாடசாலையின் விளையாட்டரங்கிற்கு அண்மையிலுள்ள காட்டுப் பகுதியொன்றில் விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்காக நிலம் அமைக்கப்பட்டிருந்ததுடன் அக்காணியில் கற்கள் தோன்றியுள்ளதாகவும் விளையாடுதல் சிக்கலான விடயமொன்றாக கண்டறியப்பட்டது. அவ்வாறே பாடசாலையில் உள்ள வொலிபோல் விளையாடுவதற்காக பொருத்தமான இடமொன்று காணப்படுவதாகவும் வொலிபோல் விளையாடுவதற்காக புதிதாக காணி தயார்செய்யப்பட்ட காணி விளையாடுவதற்கு வசதியான வகையில் பொருத்தமாக தயார் செய்வதற்கு மேலும் கூடுதலான கிரயமொன்று ஏற்படுவதாகவும் செலவிடப்பட்ட பணத்திலிருந்து உயர் நலனொன்று கிடைக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முன்னர் அதில் கிடைக்கும் நலன்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வேறு பொருத்தமான காணியொன்று இல்லாமல் இருந்ததாலும் பாடசாலையின் விளையாட்டரங்கில் நிர்மாணத்தை மேற் கொள்வதற்கு அதிகாரிகளிடமிருந்த விருப்பமின்மை காரணமாக குறித்த நிர்மாணம் நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் ஆகக்கூடிய வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பிபில பிரதேச செயலகத்தினால் கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2018 இன் கீழ் வேகம தெற்கு மாவத்தை நீர் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 902,450 செலவிடப்பட்டிருந்தது. இந்நீர் செயற்திட்டம் 2019 ஒக்தோபர் 16 ஆந் திகதி அளவில் செயற்படாத நிலைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் செயற்பாடு நிலைக்கு கொண்டுவருவதற்காக நீர் மோட்டார் ஒன்றை பொருத்துதல் மற்றும் விநியோக குழாய் முறையை தயாரித்தல் போன்ற செயற்பாடுகள் நிறைவேற்ற வேண்டியிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டம் செயற்திறனாக செயற்படுகின்ற நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் அளவின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக மோட்டாரொன்றை பொருத்துவதற்கு நிதி ஏற்பாடுகளை வழங்குமாறு கோரப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | மொனறாகல பிரதேச செயலகத்தினால் 2019 கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நெதகல்லன்த சுற்று வட்டத்திலிருந்து இத்தேகடுவ குளம் வரை வீதிக்கு கிரவல் இட்டு புனரமைப்பதற்காக ரூபா 1,940,000 பெறுமதியான உடன்படிக்கை செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்கு விவசாய அமைப்பொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் 2019 நவம்பர் 21 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், பரிசோதனை மேற்கொண்ட 2020 சனவரி 14 ஆந் திகதி வரையிலும் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண வேலைகள் மேற் கொள்ள வேண்டியதுடன் ஒப்பந்தத்தை பகிஷ்கரித்தல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இந்நிர்மாணம் தொடர் வேலையாக்கப்பட்டுள்ள துடன் 2020 ஆம் ஆண்டின் போது நிதி ஏற்பாடு கோரப்பட்டுள்ளதுடன் குறித்த நிதிஏற்பாடு கிடைத்தவுடன் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

## 3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 யூலை 09 ஆந் திகதி பெறுகை வழிகாட்டல் கோவைக்கான மேலதிக கையேடு 34 ஆம் இலக்கத்தின் பிரகாரம் சந்தை ஒப்பீட்டு முறைமை பயன்படுத்தப்பட்டு கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் ஆகக்கூடிய எல்லை ரூபா ஒரு மில்லியனாக இருந்தபோதும் | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். இவ்வாறான நிலைமை ஒன்று ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்கு இணங்காமல் சியம்பலான்டு பிரதேச செயலகத்தினால் இரண்டு பெறுகை தீர்மானங்களின் கீழ் அந்த எல்லையை விஞ்சி ரூபா 2,382,310 பெறுமதிக்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | தனமல்வில பிரதேச செயலகத்தினால் வெவ்வேறு தரப்பினருக்காக பகிர்ந்தளிப்பதற்காக 70 மேசைகள், 77 கதிரைகள், 06 ஆசிரிய மேசைகள் மற்றும் 10 ஆசிரிய கதிரைகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,237,000 தொகையும் 1 அங்குல மோட்டார்கள் 46 கொள்வனவு செய்வதற்காக ரூபா 900,000 தொகையும் 52 புல்வெட்டும் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 600,000 உம் செலவிடப்பட்டிருந்தன. 2006 இன் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) பந்தியின் பிரகாரம் ரூபா 500,000 இனை மிகைக்கும் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக உடன்படிக்கையொன்றுக்கு வரவேண்டிய போதிலும், இக்கொள்வனவு தொடர்பாக உடன்படிக்கை மேற்கொள்ளப் படாமல் இருந்ததுடன், மேசைகள், கதிரைகள், ஆசிரியர் மேசைகள் மற்றும் ஆசிரியர் கதிரைகள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக 2006 அரசின் பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டலின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்கால கொள்வனவின் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | குறைவாக அபிவிருத்தி செய்யப்பட்ட சமயப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மலைநாட்டு உரிமைகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகிய இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 117 மேசைகள் மற்றும் 113 கதிரைகள் கொள்வனவு செய்வதற்காக வெள்ளவாய பிரதேச செயலகத்தினால் ரூபா 1,072,300 செலவின மொன்று | | |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | | |
| (i) | 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) பந்தியின் பிரகாரம் ரூபா 500,000 இனை மிகைக்கும் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்றுக்கு வரவேண்டிய போதிலும், இக்கொள்வனவு தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | பெறுகை வழிகாட்டலின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களில் இவ்வாறான குறைபாடொன்று இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | மேசைகள் மற்றும் கதிரைகள் என்பவற்றிற்கு கூறுவிலை கோரும் பதிவேட்டின் 09 ஆம் இலக்க நிபந்தனையில் கட்டளையிடப்பட்ட திகதி முதல் 07 நாட்களுக்குள் கட்டளைகள் ஒப்படைக்காவிட்டால் தாமதிக்கும் ஒவ்வொரு நாளுக்கும் 0.2 சதவீத தண்டப்பணம் அறவிடப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும், தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை | கூறுவிலை கோரும் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் தாமத தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | தவறொன்றினால் அப்பந்தி உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் கவனத்துடனும் அவதானமாகவும் செயற்பட வேண்டுமென உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

### 3.3 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வெள்ளவாய பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2002 செப்தெம்பர் 19 ஆந் திகதி விபத்திற்குட்பட்டு ரூபா 375,000 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. நிதிப்பிரமாணம் 104(4) இன் அறிக்கையின் பிரகாரம் அந்நட்டத்தை சாரதியிடம் அறவிடுவதற்கு | நட்டத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ரூபா 75,000 மாத்திரம் அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கு ஆலோசனை கோரப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், . 2013 ஏப்ரல் 23 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் குழு கூட்டத்தில் இந்நட்டத்தை சாரதியிடமிருந்து அறவிடுமாறு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அக்கட்டளை வழங்கி 07 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்நட்டத்தில் இருந்து ரூபா 75,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மொனறாகலை பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2009 மார்ச் 23 ஆந் திகதி விபத்திற்கு உடபட்டிருந்ததுடன் விபத்து காரணமாக வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டத்தின் பெறுமதி ரூபா 3,175,702 ஆக இருந்தது. நட்டத்தை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு 2015 யூலை 16 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்ட போதும் அதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. கெப் வண்டியை திருத்தியமைப்பதற்காக ரூபா 3,175,702 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதும் 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 9.3.1(ஆ) பந்தியின் பிரகாரம் அதற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் கெப் வண்டியை காப்புறுதி செய்யாமை காரணமாக திருத்த வேலைக்கான முழுச் செலவினமும் அரசின் பணத்திலிருந்து செலவிடுவதற்கு நேர்ந்திருந்தது. | தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அமைச்சு செயலாளர் அங்கீகாரம் வழங்கிய கடிதமொன்று இல்லாமல் இருந்ததுடன் இக்காலப்பகுதிக்குள் மாவட்ட செயலாளரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. போதியளவு பணம் இல்லாமையால் காப்புறுதி செய்யப்படவில்லை. |
| (இ) | சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2013 திசெம்பர் 23 ஆந் திகதி விபத்திற்குட்பட்டு ரூபா 123,674 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. இந் நட்டத்திலிருந்து 25 சதவீதமான ரூபா 30,893 தொகையை சாரதியின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட வேண்டுமென 2016 சனவரி 27 ஆந் திகதிய நிதிப் பிரமாண ம் 104(4) பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அப்பரிந்துரை தொடர்பில் கவனம் செலுத்தாமல் நட்டத்தை அறவிடாமல் சாரதி ஓய்வுபெறச்செய்யப்பட்டிருந்தார் | நட்டத்தை உடனடியாக் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நட்டம் தொடர்பாக பொறுப்பான சாரதி மரணித்திருந்ததுடன் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 பிரதேச செயலகங்களால் வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 12 வகைப் பொருட்களுக்குரிய 311 அலகுகள் நலனாலிகளுக்கு இடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருக்க வில்லை. | பகிந்தளிக்கப்படாத பொருட்களை நலனாலிகளுக்கு இடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் | எதிர்காலத்தில் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | களஞ்சிய வசதிகள் இல்லாமை காரணமாக வெள்ளவாய பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் வெவ்வேறு தரப்பினர்களிடமிருந்து பகிர்ந்தளிப்பதற்காக கிடைக்கும் பொருட்களை கணக்காளரின் அரச இல்லத்திலும் உடைந்து விழக்கூடிய நிலையிலுள்ள விடுதியிலும், அலுவலக கட்டிடத்திற்கு உள்ளேயும் அலுவலக வளவிலும் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | முறையான களஞ்சிய முகாமைத்துவ முறையொன்று பேணப்பட வேண்டும். | களஞ்சிய வசதிகள் இல்லாமை காரணமாக இந்நிலைமை உருவாகியுள்ளது. களஞ்சியமொன்றை நிர்மாணிப்பதற்கு நிதிஏற்பாடு கோரப்பட்ட போதும் இதுவரை கிடைக்கவில்லை. |

## 4 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 பிரதேச செயலகங்களின் ஊழியர் விபரங்களின் பிரகாரம் பதவி நிலைத்தர பதவிகள் 18 உம், இரண்டாம் நிலைத் தர பதவிகள் 125 உம் ஆரம்ப மட்ட தரத்திலான 06 பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன. | அத்தியவசிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். மாதாந்தம் பதவியணியினர் தொடர்பான தகவல்கள் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. முடியுமானவரை |

| | | | |
|---|---|---|---|
| | | | வெற்றிடங்கள குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு சேவை நிலையத்திலும் சேவை புரியக்கூடிய ஆகக்கூடிய சேவைக் காலம் 05 ஆண்டுகளாகும். 08 பிரதேச செயலங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள 276 உத்தியோகத்தர்கள் 06 ஆண்டு முதல் 28 ஆண்டுகள் வரை ஒரே சேவை நிலையத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | சுற்றறிக்கையின் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இடமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும். | குறித்த பதவி வெற்றிடங்கள் தொடர்பான பதவியணியினர் தகவல்கள் மூலம் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |